மாகாணக் கல்வி திணைக்களம் சபரகமுவ – வார பாடசாலை

வாரம் 1

பாடம் - கணக்கீடு

தயாரிப்- Suresh Bernard Kumar-R/Sri Krishna Tamil M.V.

தரம் - 12

Weekly School Department of Education, Sabaragamuwa Province

**தேர்ச்சி 1.0** – கணக்கீடும் அதன் தேவையையும் விபரிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.1** – வணிகம் மீது அக்கறை செலுத்தும் பிரிவினருக்க தீர்மானம் எடுப்பதற்காக கணக்கீட்டு தகவல்கள் முக்கியத்துவமாகும் விதத்தை விபரிப்பர்

**கணக்கீடு எனப்படுவது –**

- அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு தீர்மானம் எடுப்பதற்காக கணக்கீட்டு அலகுடன் தொடர்பான பொருளாதார தகவல்களை வழங்கும் மொத்த தொழிற்பாடு கணக்கீடாகும்.

**கணக்கீட்டின் நோக்கங்கள் -**

- கணக்கீட்டு அலகு தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு தீர்மானம் எடுப்பதற்கு தேவையான பொருளாதார தகவல்களை தொடர்புபடுத்தல் கணக்கீட்டின் பிரதான நோக்கமாகும்.
- கணக்கீட்டு அலகு, நபர், அரசாங்கம், வணிக அமைப்பு வணிகம் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கையாக இருக்க முடியும்.
- இங்கு பொருளாதார தகவல்களாக அடையாளம் காணப்படுவது நிதியியல் தகவல்களாகும்.

**பயிற்சி**

1. வணிகமொன்றின் நிதி தகவல்கள், நிதியல்லா தகவல்களுக்கு உதாரணம் 3 படி தருக
2. நிறுவனமொன்றில் அக்கறை செலுத்தும் பிரிவினர் 5 இனை பெயரிட்டு அவ்வாறு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களை எழுதுக